# இந்தக் கட்டிடத்தில் லேகியோன் கணக்கில் தூதர்கள் இருக்கிறார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* **பிதாவை எங்களுக்குக் காண்பியும்**, ஜூன் 25, 1955

----------

14. இப்பொழுது, நாம் தேவனை நோக்கிப் பார்ப்போம். நிச்சயமாகவே, அவர் இருக்கிறார் என்று நாம் சொல்லுகிற வண்ணமாக, தேவன் உண்மையாயிருந்தால், ஏதோவொன்று அவரை அறிவிக்க வேண்டும். **நம்மால் அப்படியே நம்முடைய கண்களைத் திறக்க முடியுமானால், உங்களால் தேவனைக் காண முடியும்.**

15. இப்பொழுது, ... போன்று, எலிசா தோத்தானில் இருந்தபோது, கேயாசி என்று அழைக்கப்பட்ட ஒரு ஊழியக்காரனையும் தன்னோடு வைத்திருந்தான். கேயாசி தரிசனங்களைக் கண்டதில்லை, ஆனால் எலிசா தரிசனங்களைக் கண்டான். ***அவன் தன்னுடைய வீட்டில் இருந்தபடியே, சீரியாவின் இராஜா என்னச் செய்யப் போகிறான் என்பதை அறிந்தவனாயிருந்தான்.***

16. எனவே ஒருநாள் அவர்கள்... ஒரு இரவில், அவர்கள் தோத்தானில் உறங்கினார்கள், கேயாசி அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து, வெளியே

வந்தபோது, சீரிய இராணுவங்கள் எல்லாம் பட்டணத்தை சுற்றி வளைத்திருந்தன. உடனே அவன் உள்ளே ஓடிச்சென்று, "பட்டணம் ஒவ்வொரு பக்கத்திலும் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

**ஆனால் தீர்க்கதரிசியோ, உணர்ச்சிவசப்படாமல் சாந்தமாகவும், அமைதியாகவும், "அவர்களோடிருப்பவர்களைப் பார்க்கிலும் நம்மோடியிருக்கிறவர்கள் அதிகம்" என்றான்.**

அவன் சுற்றிலும் நோக்கிப் பார்த்தான், கேயாசி அவ்வாறு சுற்றிலும் பார்த்த போது, எதையும் அவனால் காண முடியவில்லை. எலிசா தன்னுடைய கரங்களை முன்னே நீட்டி (put forth), "தேவனே, இந்த மனிதனுடைய கண்களைத் திறந்தருளும்" என்றான்.

17. **ஆவிக்குரிய உலகத்தைக் காணும்படி அவனுடைய கண்கள் திறக்கப்பட்ட போது, அந்த வயதான தீர்க்கதரிசியைச் சுற்றிலும் எல்லா திசையிலும் தூதர்கள் இருந்தார்கள்.** ***அந்தமலைகள் தூதர்களைக் கொண்ட அக்கினிமயமான இரதங்களால் கொழுந்து விட்டு எரிகிறதாய் இருந்தது.*** பாருங்கள், **இப்பொழுது சரியாக இங்கேயே ஒரு உலகம் இருக்கிறது; இந்தக்**

கட்டிடத்தில் லேகியோன் கணக்கில் தூதர்கள் இருக்கிறார்கள்.

சங்கீதங்களில், தேவனுடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள் என்று தாவீது மூலமாக இயேசு கூறியுள்ளார்.

18. **எனவே இங்கே தேவனுக்குப் பயப்படுகிற விசுவாசிகளை நோக்கிப் பாருங்கள், எனவே தான் தூதர்கள் எல்லாவிடங்களிலும் இருக்கிறார்கள்.** இப்பொழுது, உங்களால் அப்படியே தேவனை ஆராதிக்க முடியுமானால், நம்முடைய கண்களைத் திறந்து, நம்மைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் தேவன் இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

★★★★★

